Clr.No.19

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | |
| **Preliminary Register** | : | **Case No. CC/185/2023** |
| **Sessions** | : | |
| **Deposition of witness for** | : | **Prosecution PW 1 /LW1** |
| **Name** | .. | திருமதி. முத்தம்மாள் |
| **Father's/Husband's Name** | .. | திரு. கோவிந்தசாமி |
| **Village** | | |
| **Taluk** | .. | |
| **Caste** | .. | |
| **Calling** | .. | |
| **Religion** | .. | |
| **Age** | .. | **55** |

**Date: 24/10/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்

**முதல் விசாரணை**

1. நான் தற்பொழுது எண்.3, ராஜா சண்முகம் நகர், 9வது தெரு, திருவொற்றியூர் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மருமகள் ஆவார். கடந்த 16.05.2022 திங்கள் கிழமை அன்று நான் வீட்டில் இருந்த போது காலை சுமார் 07.00 மணிக்கு ஆஜர் எதிரி

அவர்கள் வீட்டிலிருந்து வந்து என்னை தேவிடியா என்று அசிங்கமாக பேசி தலைமுடியை பிடித்து இழுத்து கட்டையால் தலையில் அடித்து தலைமுடியை பிடித்து இழுத்து மார்பில் அடித்தார். நீ இருந்தால் எனக்கு சொத்து கிடைக்காது என்று கூறி அடித்தார். கழுத்தை நெறித்தார் காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுத்தோம். பின்பு ஸ்டான்லி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (புகார் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).என்னை எதிரி தாக்க பயன்படுத்தியகட்டையை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் அடையாளம் காட்ட முடியும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கட்டயால் தான் எதிரி என்னை அடித்தார். (கட்டை சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

**எதிரிதரப்புகுறுக்குவிசாரணை:-**

2. நீங்கள் எங்கு வேலை செய்கிறீர்கள் என்றால் நான் இல்லத்தரசி. திருமணம் ஆன நாள் முதலே நீங்கள் இல்லதரசி என்றால் ஆமாம்.

உங்களுக்கு வீடாகவோ, மனையாகவோ, விவசாய நிலமாகவோ எத்தனை சொத்துக்கள் உள்ளது எங்கு உள்ளது என்றால், சொந்த வீடு உள்ளது. ஒரு பங்கு வீடு மற்றும் ஒரு சொந்த வீடு உள்ளது.

3. வண்ணாரப்பேட்டையில் உள்ள வீடு என்னுடைய மாமனார் பெயரில் உள்ளது. திருவொற்றியூரில் உள்ள வீடு எனது கணவர் பெயரில் உள்ளது. அதுவும் என்னுடைய மாமனார் சொத்து தான். என்னுடைய பெயரில் சொத்து எதுவும் இல்லை.

4. ஆஜர் எதிரியார் என்றால் எனது மருமகள். எதிரி எந்த மகனின் மனைவி என்றால் 2வது மகனின் மனைவி ஆவார். இரண்டாவது மகனின் பெயர் என்னவென்றால் பாலாஜி. திருமணம் எப்போது நடந்தது என்றால் சுமார் 7 வருடங்களுக்கு முன்பு நடந்தது. பாலாஜிக்கு எத்தனை பிள்ளைகள் உள்ளனர் என்றால் ஒரு மகன் உள்ளார். அந்த பையன் எப்பொழு பிறந்தார் என்றால் வருடம் தெரியவில்லை சுமார் 6 வயது இருக்கும்.

5. உங்களது மருமகள் உங்களுடன் இருக்கிறார்களா என்றால் தற்பொழுது எங்களுடன் இல்லை. சுமார் 3, 4 வருடங்களாக அவர்கள் எங்களுடன் இல்லை. உங்களது பேரன் யாருடன் இருக்கிறார் என்றால் தற்பொழுது எங்களுடன் இருக்கிறார். 4வருடங்களுக்கு முன்பு குழந்தை யாரிடம் இருந்தது என்றால் அவர்களுடன் இருந்தது.

6. நீங்களும் உங்களது மகனும் குழந்தையை பார்பீர்களா என்றால் பார்ப்போம். அப்படி பார்ப்பீர்கள் என்றால் எண்ணூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் குழந்தையை பார்க்கவிடுவதில்லை என்று புகார் கொடுத்தீர்களா என்றால் ஆமாம். போலீசார் என்ன சொன்னார்கள் என்றால் வாரம் 1 முறை குழந்தையை காட்டுமாறு சொன்னார்கள். குழந்தையை அவர்கள் காண்பிக்கும் போது ஏன் அவர்கள் மீது புகார் கொடுத்தீர்கள் என்றால் அவர்கள் குழந்தையை காட்டாமல் தகாராறு செய்ததால் தான் புகார்கொடுத்தேன். அவர்களும் புகார் கொடுத்துள்ளார்கள். அவர்கள் திருவொற்றியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள்.

7. அவர்கள் என்ன புகார்  கொடுத்தார்கள் என்றால் குழந்தையை காட்டவில்லை விசாரித்து அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு அனுப்பிவிட்டார்கள். இந்த விஷயத்தை எண்ணூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன்.

8. காவல் நிலையத்தில் எப்பொழுது குழந்தையை பார்ப்பதற்கு அனுமதிகொடுத்தார்கள் என்றால் வாரத்தில் 1 முறை காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை. யார் குழந்தையை அழைத்து வருவார்கள் என்றால் குழந்தையின் அப்பா.

9. 15.05.2022 அன்று உங்களது மகன் பேரனை அழைத்து வந்தாரா என்றால் அதற்கு முன்னால் கூட்டி வந்து குழந்தையை விடும் பொழுது அவர்கள் குழந்தையை வாங்க மறுத்துவிட்டார்கள். குழந்தை வாங்க மறுத்த விஷயத்தை எண்ணூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சொன்னீர்களா என்றால் இல்லை.

10. 15.05.2022 அன்றுகாலை உங்கள் மகன் குழந்தையை அழைத்து சென்று விடவில்லை என்றால் சரியல்ல நாங்கள் கொண்டு சென்று விடப்போன போது தான் தகராறு. 16.05.2022 அன்று உங்களது மருமகள் உங்கள் வீட்டிற்கு வந்த போது எத்தனை மணியிருக்கும் என்றால் காலை 07.00 மணியிருக்கும்.

11. உங்கள் வீட்டில் எத்தனை மாடி உள்ளது என்றால் இரண்டு மாடி உள்ளது. நீங்கள் எந்த தளத்தில் குடியிருக்கிறீர்கள் என்றால் முதல் தளத்தில் குடியிருந்து வருகிறேன். தரைத்தளத்திலும். 2வது தளத்திலும் யார் உள்ளார்கள் என்றால் தரைதளத்தில் வாடகைக்கு விட்டுள்ளோம். 2வது தளத்தில் எனது 2வது பையன் பாலாஜி மற்றும் அவரது மனைவியை விட்டுள்ளோம். வாடகைக்கு எத்தனை வீடு விட்டுள்ளீர்கள் என்றால் 2 வீட்டை வாடகைக்கு விட்டுள்ளோம்.

12. உங்களது மருகள் 16.05.2022 அன்று உங்களது வீட்டிற்கு எந்த தளத்திற்கு வந்தார் என்றால் 2வது தளத்திற்கு வந்தார். அவர் நீங்கள் குடியிருக்கும் முதல் தளத்திற்கு வரவில்லை என்றால் நான் கீழேயே

தான் இருந்தேன். அன்று என்ன நடந்தது என்றால் என்னை அங்கிருந்து கூப்பிட்டு பேசிக்கொண்டே வந்தார். நான் எனது மகனை எதுவும் பேசவேண்டாம் என்று சொல்லிக்கொண்டிருந்தேன். ஆனால் எனது மருமகள் என்னை தேவிடியா, தேவிடியா என்று பலமுறை சொல்லி மாப்பிள்ளை இல்லாமல் உன்னால் தூங்கமுடியாதா என்று என்னை தகாத வார்த்தைகளால் பேசினார். இந்த விஷயத்தை உங்களது புகாரில் சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை.

13. 16.05.2022 அன்று உங்கள் வீட்டிலும், வாடகை வீட்டிலும் யார் யார் இருந்தார்கள் என்றால் அவர்கள் வீட்டில் இருந்தார்கள். உங்களது மருமகள் குழந்தையை வாங்கத்தான் வந்தார்கள் என்றாலும் நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. உங்கள் மகன் பாலாஜி எதிரியின் வீட்டிற்கு சென்றாறா என்றால் சென்றார்.

14. உங்கள் மருமகள் குழந்தையை வாங்குவதற்காக வந்த போது உங்கள் மகன் பாலாஜி அவர்களுடைய வீட்டிற்கு குழந்தையுடன்

சென்றுவிட்டார் என்றாலும் அப்படி இருக்க உங்களை அடித்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. கட்டை எங்கு இருந்தது என்றால் கட்டை கீழேகிடந்தது. கட்டையை தூக்கி கொண்டு வந்த போது பார்த்தீர்களா என்றால் இல்லை அடித்த போது தான் பார்த்தேன். எங்கு வைத்து அடித்தார்கள் என்றால் முதலாவது மாடியில் வைத்து அடித்தார்கள். அடிக்கும் போது அருகில் யார் இருந்தார்கள் என்றால் பாத்ரூமில் இருந்து வந்து என்னுடைய கணவர் தான் மடக்கி அவர்களிடமிருந்து என்னை கூட்டிவந்தார்.

15. தலைமுடியை பிடித்து படிகட்டில் தரதரவென்று இழுத்து வந்தார்களா என்றால் ஆமாம். உங்களது புகாரில் காலைபிடித்து தரதரவென்று இழுத்துவந்தார்கள் என்று சொன்னேன் என்றால் இல்லை. கழுத்தை பிடித்து இழுத்தார்களா என்றால் ஆம் கழுத்தை பிடித்து நெறித்தார்கள். உங்களது புகாரில் கழுத்தை பிடித்து நெறித்தவிஷயத்தை சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. மார்பில் அடித்ததாகத்தான் சொல்லியுள்ளேன்.

16. எந்த தளத்தில் இருந்து எந்த தளம் வரை உங்களை தரதரவென்று இழுத்துவந்தார்கள் என்றால் முதல் தளத்திலிருந்து தரைதளம் வரை இழுத்து வந்தார். முதல் மாடிக்கு வரவில்லை என்று சொல்லிவிட்டு தற்போது முதல் மாடியில் வந்து அடித்ததாக சொல்வது தவறு என்றால் முதல் மாடி தாண்டி தான் இரண்டாவது மாடிக்கு போக வேண்டும்.

17. தலையில் எங்கு அடித்தார்கள் என்றால் நடுமண்டையில் ஒரு முறை அடித்தார்கள். இரத்தம் வந்ததா என்றால் வந்தது. இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் போலீசார் வீட்டிற்கு வந்து விசாரணை செய்தார்கள். மருத்துவமனைக்கு எப்படி போனீர்கள் என்றால் பைக்கில் எனது வீட்டுக்காரருடன் ஸ்டான்லி மருத்துவமனைக்கு சென்று புறநோயாளி பிரிவில் தான் சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். ICUவில் தான் சிகிச்சை பெற்றேன் என்று புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ICUவில் தான் நான் சிகிச்சை பெற்றேன்.

18. உங்கள் பெயரில் எந்த ஒரு சொத்தும் இல்லை என்றாலும் எதிரியின் மீது நீங்கள் பொய்யான புகாரினை சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றாலும் சரியல்ல. உங்களுடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் 7 நபர்கள். மருவத்தூரில் உள்ள எனது ஒரே அண்ணன் வீட்டில் தங்கியுள்ளேன்.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2025.10.24 18:07:43 +0530

நீதித்துறை நடுவர்,

திருவொற்றியூர்